தினமணி

## 20-ல் ஜப்பானிய காடை வளர்ப்பு பயிற்சி

First Published : 18 Dec 2010 09:57:00 AM IST

திருப்பூர், டிச.17: திருப்பூரில் ஜப்பானிய காடை வளர்ச்சி பயிற்சி திங்கள்கிழமையும், நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி புதன்கிழமையும் வழங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் திருப்பூர் மற்றும் சுற்று வட்டார மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பங்கேற்று ஜப்பானிய காடை, நாட்டுக் கோழி வளர்ப்பிலுள்ள விஞ்ஞான முறைகளை தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 0421 -2248524 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இத்தகவல் ஆராய்ச்சி மைய தலைவர் ரா.செல்வராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனைத்து பயிர்களுக்கும் இலவச மின்சாரம்

First Published : 18 Dec 2010 12:44:25 PM IST

நாமக்கல், டிச.17: உணவுப் பயிர், தோட்டப் பயிர் என பிரிக்காமல் அனைத்து பயிர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நாமக்கல்லில் மாவட்ட விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டமைப்பின் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விவசாய நலச் சங்கத் தலைவர் கே. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்த விவரம்:

இலவச விவசாய சிறப்பு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தில் விவசாயிகளை பாதிக்கும் பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்குத் தீர்வு காண மின்சார வாரிய உயர் அதிகாரிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் இடம்பெறும் குழுவை அமைக்க வேண்டும். விவசாயிகளுக்கான மானியம் மற்றும் இலவசத் திட்டங்கள அறிவிப்பதற்கு முன்பு, விவசாயப் பிரதிநிதிகளுடன் அரசு கலந்தாலோசிக்க வேண்டும். உணவுப் பயிர், தோட்டப் பயிர் என பிரிக்காமல் அனைத்து பயிர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும்.

பண்ணை சாராக் கடன்களுக்கான முழு வட்டியையும் தள்ளுபடி செய்து அசல் தொகையை மட்டும் செலுத்த உத்தரவிட வேண்டும். பொதுத் துறை மற்றும் தனியார் வங்கிகளில் இருந்து கடன்பெற்று, நாமக்கல் மாவட்ட விவசாயிகளால் டிராக்டர்கள் வாங்கப்பட்டன.

ஒருசில விவசாயிகளால் கடனை முழுமையாகத் திருப்பி செலுத்த முடியாத நிலையில் அவர்களது டிராக்டர்களை ஜப்தி செய்யும் நடவடிக்கையில் வங்கி அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களை அழைத்துப் பேசி பிரச்னைக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆகியவை உள்பட 10 தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

**கள் இயக்கம் ஆலோசனைக் கூட்டம்**

First Published : 18 Dec 2010 09:56:53 AM IST

அவிநாசி, டிச. 17: தமிழ்நாடு கள் இயக்கம் சார்பாக ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை அவிநாசி கள் இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு, பாரதிய கிசான் சங்கத்தின் திருப்பூர் மாவட்டத் தலைவர் மா.வேலுசாமி தலைமை தாங்கினார். தமிழ்நாடு கள் இயக்க கள ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி, நாமக்கல் மாவட்ட தமிழக விவசாய சங்கத் தலைவர் எஸ்.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கள்ளுக்கு விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டும். கள்ளை உணவின் ஒரு பகுதியாக அறிவிக்க வேண்டும். கள்ளுக்கான தடையை நீக்குவது தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி கே.பி.சிவசுப்பிரமணியம் குழுவின் அறிக்கையை அரசு தாமதப்படுத்தமல் உடனடியாக வெளியிட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வரும் ஜன. 21-ம் தேதி தடையை மீறி கள் இறக்க போவதாக கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கள் இயக்க அமைப்பாளர் இல.கதிரேசன் மற்றும் விவசாயிகள் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,00:46 IST

திருவூர் : ஆரணியார் உபவடி நீர்கோட்டத்தில் பாசன பரப்பை அதிகப்படுத்த, ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடிக்கான உயர்தொழில் நுட்ப பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தமிழகம் முழுவதும் ஆற்றுப் படுகைகளில் பாசனப் பரப்பை அதிகப்படுத்தவும், பாசன நீர்

உபயோகத் திறனை மேம்படுத்தவும், நீர் வள நில வள திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்படுகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலை சார்பில் நிறைவேற்றப்படுகிறது.இதன்படி, திருவூரில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையத்தில், ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கான நிலையப் பயிற்சி நடந்தது. இதில் பூண்டி வட்டத்தைச் சேர்ந்த அம்மம்பாக்கம், எடம்பேடு, கச்சூர், கலவை, அத்திலிவாக்கம் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து 50 விவசாயிகள் பங்கேற்றனர்.நிலையத் தலைவர் ராமசுப்பிரமணியம் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில், சாகுபடி தொழில் நுட்ப பயிற்சிகளை விவசாயிகளுக்கு பல்கலைப் பேராசிரியர்கள் வழங்கினர்.நெற்பயிரில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, ராஜராஜன் ஆயிரம் சாகுபடி தொழில் நுட்பங்கள், பயறு வகை பயிர்களில் உற்பத்தியை பெருக்குவதற்கான தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் முத்துராமலிங்கம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

**மேட்டூர் அணை நீரை திருப்பி விட ரூ.1,100 கோடியில் திட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,01:44 IST

ஓமலூர்: ""மேட்டூர் அணை நிரம்பி வெளியேறும் உபரிநீரை விவசாயிகளின் பாசன வசதிக்காக திருப்பிவிட 1,100 கோடி ரூபாயில் புதிதாக திட்டமிடப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது," என வேளாண் அமைச்சர் அறிவித்தார். சேலம் மாவட்டம் ஓமலூரில் இலவச கலர் "டிவி' மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் கலையரசி தலைமை வகித்தார். ஓமலூர் எம்.எல்.ஏ., தமிழரசு முன்னிலை வகித்தார். வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில், ""மேட்டூர் அணை நிரம்பி வெளியேறும் உபரிநீர் சேலம் மாவட்ட விவசாயிகளின் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று எம்.எல்.ஏ., தமிழரசு கோரிக்கை விடுத்தார். இத்திட்டம் நிறைவேற்றப்பட சாத்தியக்கூறு இருப்பதாக சொன்னார். எனவே, இந்த திட்டம் 1,100 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்ற கருத்துரு தயாரிக்கப்பட்டு, முதல்வரிடம் கொடுக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது," என்றார்.

**வேர்கடலை விதைநேர்த்திசெய்த விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,01:47 IST

கிள்ளை:கிள்ளை சுற்றுப்பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த மழையால்வேர்க்கடலை விதை நேர்த்தி செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழை காரணமாக வீடுகள் மற்றும் பயிர்களில் தண்ணீர் ‹ழ்ந்தன. மழை விட்டு வெயில் காயத் துவங்கிய நிலையில்வேர்க்கடலை விதை நேர்த்தி செய்ய வயலை ஆயத்தப் படுத்தி, புழுதி ஓட்டி ஈரப்பதத்தை உலர வைத்தனர்.
கிள்ளை, பொன்னந்திட்டு, மானம்பாடி, ஆசாரவெளி பகுதியில் 2,000 ஏக்கருக்கும்மேல்வேர்க்கடலை விதை நேர்த்தி செய்து முளைப்பு கட்டியிருந்தது. இந்நிலையில் இரண்டு தினங்களாக அதிகாலையில் பெய்த திடீர் மழையால் விதை நேர்த்தி செய்த விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

**சங்கராபுரம் பகுதியில்நெல் சாகுபடி தீவிரம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,01:34 IST

சங்கராபுரம்:சங்கராபுரம் வட்டத்தில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.சங்கராபுரம் வட்டத்தில் தியாகராஜபுரம், எஸ்.வி.பாளையம், தேவபாண்டலம், குளத்தூர், கடுவனூர், நெடுமானூர், சோழம்பட்டு, மூக்கனூர், அத்தியூர் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் நடப்பு சம்பா பருவத்தில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி செய்துள்ளனர்.சங்கராபுரம் வட்டாரத்திலுள்ள விவசாயிகள் வேளாண்மை துறையின் வழிகாட்டுதலின்படி சாகுபடி செய்து அதிக லாபம் பெற முயற்சிக்க வேண்டுமென வேளாண்மை உதவி இயக்குனர் ஆனந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**உழவர்சந்தையில் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,01:12 IST

ஓசூர்: தேன்கனிக்கோட்டை உழவர்சந்தையில் ராகி விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் லட்சுமிராஜ் தலைமை வகித்தார். ராகி உள்ளிட்ட சிறுதானியங்களுக்கு கூடுதல் விலை கிடைக்க சந்தை விலை நிலவரம் அறிந்து விற்பனை செய்யும் முறைகள், அறுவடை செய்யும் புதிய தொழில்நுட்பங்கள்,

அறுவடைக்கு பின் பராமரிக்கும் தொழில்நுட்பம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்கள் செயல்முறை பயிற்சி விளக்கம் அளித்தனர்.

வேளாண் அலுவலர் அன்பழகன் கூறுகையில், ""தேன்கனிக்கோட்டை தாலுகாவில் அதிகளவு ராகி சாகுபடி செய்யப்படுகிறது. ராகி பயிர் அறுவடை செய்த பின் வேளாண் துறை அறிவுறுத்தும் தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டும். குறிப்பாக விலை நிலவரத்திற்கு தகுந்தாற்போல் விவசாயிகள் தங்களுடைய விற்பனை செய்ய வேண்டும். இதனால், எதிர்பார்த்த லாபமும், கூடுதல் வருமானமும் கிடைக்கும், " என்றார். ஏராளமான விவசாயிகள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

**பண்ணை சாரா நிலுவை கடன்களை செலுத்த காலம் நீட்டிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,01:05 IST

தர்மபுரி: கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட பண்ணை சாரா நிலுவைக் கடன்களை செலுத்த டிசம்பர் 31ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.
கலெக்டர் ஆனந்தகுமார் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மண்டலத்தில் செயல்படும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர கூட்டுறவு வங்கி, தொடக்க கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் வழங்கிய பண்ணை சாரா கடனுக்கு 2007 மார்ச் 31 ம் தேதி கடன் ஒப்பந்தப்படி கடைசி தவணையினை கட்டாமல் தவறியவர்களுக்கு சிறப்பு சலுகை அறிவிக்கப்பட்டது.
பண்ணை சாரா சிறப்பு கடன் தீர்வு திட்டத்தில், இதுவரை சேராத கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையில் 25 சதவீகிதத்தை 2011 பிப்ரவரி 28 ம் தேதிக்குள் தொடர்புடைய வங்கி அல்லது சங்கத்தில் செலுத்தி ஒப்பந்தம் செய்யலாம். மீதி தொகையை ஒரே தவணையில் அல்லது அதிகபட்சமாக நான்கு காலாண்டு தவணைகளில் 2011 டிசம்பர் 31 க்குள் செலுத்த வேண்டும்.

திட்டத்தில் ஏற்கனவே சேர்ந்து 25 சதவீதம் செலுத்தியவர்கள், செலுத்த வேண்டிய மீதித் தொகையை ஒரே தவணையில் அல்லது அதிகபட்சமாக நான்கு காலாண்டு தவணைகளில் 2011 டிசம்பர் 31 க்குள் செலுத்த வேண்டும். கடன் வழங்கப்பட்ட தேதியில் இருந்து ஒப்பந்தம் செய்யும் நாள் முடிய அசலுக்கு ஆறு சதவீகிதம், சாதாரண வட்டி வசூலிக்கப்படும். கூடுதல் வட்டி, அபாராத வட்டி, இதர செலவினங்கள் முழுமையாக தள்ளுப்படி செய்யப்படும். கணக்கிடப்படும் நிலுவைத் தொகையை விட கடன்தாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் சங்கம் அல்லது வங்கியில் திரும்ப செலுத்திய தொகை அதிகபட்சமாக இருப்பின், கடன் தீர்வு செய்யப்பட்டதாக கருதப்படும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் கடன்தாரர் தொகை ஏதும் திரும்ப செலுத்தியிருக்கும் பட்சத்தில் அந்தந்த தேதிகளில் நிலுவையிலிருந்த அசல் மற்றும் வட்டிக்கு ஈடு செய்து இறுதி தொகை கணக்கிடப்படும்.

கூட்டுறவு வங்கிகளில் அல்லது சங்கங்களில் பண்ணை சாராக் கடன் பெற்று தவணை தவறியுள்ள கடன்தாரர்கள் பயன் பெறும் வகையில்திட்டத்தை தமிழக அரசு கால நீட்டிப்பு செய்துள்ளது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மக்கள் நலப்பணியாளர் பணிவிண்ணப்பங்கள் வரவேற்புதர்மபுரி: பென்னாகரம் ஒன்றியம் மாங்கரை பஞ்சாயத்தில் காலியாகவுள்ள மக்கள் நலப் பணியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

கலெக்டர் ஆனந்தகுமார் வெளியிட்ட அறிக்கை: பென்னாகரம் ஒன்றியம் மாங்கரை பஞ்சாயத்தில் காலியாகவுள்ள ஒரு மக்கள் நலப் பணியாளர் பணிக்கு அந்த பஞ்சாயத்தை சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும். 18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட எஸ்.எஸ்.எல்.ஸி., முடித்தவர்கள் (எஸ்.டி., பிரிவினர் எட்டாம் வகுப்பு முடித்திருந்தால் போதும்) டிசம்பர் 20 முதல் 24ம் தேதிக்குள் தங்கள் விண்ணப்பங்களை பென்னாகரம் கிராம பஞ்சாயத்து பி.டி. ஓ.,விடம் ஒப்படைக்க வேண்டும். கலெக்டரால் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் மூலம் பென்னாகரம் பி.டி.ஓ., அலுவலகத்தில் டிசம்பர் 20 ம் தேதி நேர்முகத் தேர்வு நடக்கும்.

**விதைப்புக்கு முன் விதை பரிசோதனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,22:15 IST

திண்டுக்கல் : விவசாயிகள் விதைப்பதற்கு முன் விதையை பரிசோதனை செய்வது அவசியமாகும். திண்டுக்கல் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் தேன்மொழி கூறியுள்ளதாவது:விதையின் புறத்தூய்மை, முளைப்புத் திறன், பிற ரக கலவன மற்றும் பூச்சி தாக்குதல் போன்ற குணங்களை பரிசோதித்து அதன்படி விதைகள் விதைப்புக்கு தேர்ந்தெடுக்க வேண்டும். மேற்கண்ட குணங்களின் தூய்மை சதவீதமானது குறையும் போது விளைச்சலும் பாதிக்கப்படும். விதையை பரிசோதித்து விதைப்பதன் மூலம் அதிக விளைச்சல் மட்டுமல்லாது, அடுத்த பருவத்திற்கான விதையும் கிடைக்கும் என்றார். திண்டுக்கல் விதை பரிசோதனை நிலையத்தில் தற்போது பணிவிதை மாதிரி மட்டுமே பகுப்பாய்வு செய்யப்படுகிறது. எனவே விதை பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் செட்டி நாயக்கன்பட்டி அருகே திருமலைக்கேணி நகரில் அமைந்துள்ள விதை பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரிகளை கொடுத்து பரிசோதனை செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**வெண்பன்றி வளர்ப்பு :கரூரில் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,01:41 IST

கரூர்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் விடுத்துள்ள செய்தி குறிப்பில் உள்ளதாவது:கரூர் மாவட்ட பண்டுதகாரன் புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப்ப பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் 21ம் தேதி வெண்பன்றி வளர்ப்பு ஒருநாள் பயிற்சி முகாம் நடக்கிறது. பயிற்சியில் வெண் பன்றி வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய் மற்றும் அவற்றை தடுக்கும் முறை, விற்பனை உத்திகள். பண்ணை பொருளாதாரம் குறித்து தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் களப்பயிற்சியும் வழங்கப்படுகிறது.பயிற்சியில் கலந்து கொள்வோர் காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாத்துக்கு வரவேண்டும். இது குறித்து கூடுதல் தகவல் பெற 04324-294335 என்று டெலிஃபோன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**மளிகை விலை உயர்வு: பதறும் நுகர்வோர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,22:13 IST

சிவகங்கை : சிவகங்கையில் மளிகை பொருள் விலை, கடந்த வாரத்தை விட அதிகரித்துள்ளது.
விலை விபரம்:
துவரம் பருப்பு-68, அதில் 2 வது ரகம் -65; 55 க்கு விற்ற தட்ட பயறு- 57, அதில் 2 வது ரகம் -49; கடலை பருப்பு- 38, அதில் 2 வது ரகம் -36; உளுந்தம் பருப்பு- 76, அதில் 2 வது ரகம் -72; வெள்ளை கொண்டக்கடலை -62, சிவப்பு-36; 67 க்கு விற்ற பாசி பருப்பு-70; 65 க்கு விற்ற 2 வது ரகம் -68; 62 க்கு விற்ற பாசி பயறு-64, 58 க்கு விற்ற 2 வது ரகம்-60; 48 க்கு விற்ற மொச்சை பயறு-50; 65 க்கு விற்ற வெள்ளை மொச்சை- 67. பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி- 22; மல்லி-49, அதில் 2 வது ரகம் -45; புளி- 48, நயம் புளி- 52; பொரி கடலை -42; வத்தல்- 45, அதில் 2 வது ரகம்- 40; 240 க்கு விற்ற மலைப்பூண்டு -220; தரப்பூண்டு-100; 32 க்கு விற்ற வெல்லம் -39; 80 க்கு விற்ற கருப்பட்டி (வேம்பார்)-84; சர்க்கரை -33; சோம்பு-140; வெந்தயம் -52; கசகசா -280; சீரகம்-180; கடுகு-45; மிளகு -260; மஞ்சள் -180 ரூபாய். அரிசி விலை (கிலோ): கல்சர் பொன்னி- 32; டீலக்ஸ் பொன்னி-28; ஐ.ஆர்.20 -20; செல்லப்பொன்னி -22; பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்.20 பச்சரிசி- 21; இட்லி அரிசி-23; கோதுமை -22; சோளம் -16; கம்பு -18; கேப்பை -16; வரகரிசி -36 ரூபாய். எண்ணெய் ஏறுமுகம்: கடலை எண்ணெய் -88; 48 க்கு விற்ற பாமாயில் -55; 90க்கு விற்ற நல்லெண்ணெய் -105; 95 க்கு விற்ற தேங்காய் எண்ணெய் -100 ரூபாய்.

**அலங்கார மீன் உற்பத்தி தொழில் துவக்கதூத்துக்குடி மீன்வளத்துறை அவசர அழைப்புதமிழக அரசு 8 லட்சம் அனுமதி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,00:34 IST

தூத்துக்குடி:அலங்கார மீன் உற்பத்தி தொழில் துவங்க ஆர்வம் உள்ளவர்கள் மீன்வளத்துறையை அணுகுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.இது குறித்து கலெக்டர் மகேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது; தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக வீட்டின் அருகில், பின் பக்கத்தில் காலியாக உள்ள இடத்தில் அலங்கார மீன் உற்பத்தி தொழில் தொடங்க விருப்பமுள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் இந்த தொழிலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு மீன்வளத்துறை மூலமாக மானியம் வழங்கும் திட்டம் தற்போது அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்த தொழில் துவங்க செலவாகும் திட்ட அலகு ரூபாய் ஒரு லட்சமாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு 50 சதவீத மானியமும், தனி நபருக்கு 25 சதவீத மானியமும், தாழ்தப்பட்டவர், பழங்குடியினருக்கு 30 சதவீத மானியமும் வழங்கப்படும். இத்தொழில் துவங்க ஆர்வம் உள்ளவர்களுக்கு சொந்த வீட்டில் நன்னீர் வசதியுடன் 200-250 சதுர அடி காலி இடமோ அல்லது வீட்டின் அருகில் நன்னீர் வசதியுடன் குறைந்தபட்சம் ஏழு ஆண்டுகளுக்கு அதே பரப்பளவுள்ள இடம் குத்தகைக்கு எடுத்த இடமாக இருத்தல் வேண்டும்.

மேலும் இந்த தொழிலை மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் வழிமுறைகளை பின்பற்றி செய்யவும், பயிற்சி எடுத்து கொள்ளவும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.தொழில் துவங்க விருப்பம் உள்ளவர்கள் தூத்துக்குடி வடக்கு கடற்கரை சாலையில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் (நீர் வாழ் உயிரின வளர்ப்பு) அலுவலகத்தை தொடர்பு கொண்டு, உரிய விண்ணப்ப படிவம் பெற்று அதனை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். இதனுடன் சொந்த வீடு மற்றும் நிலங்களுக்கான ஆவணங்களின் நகலினை அலுவலகத்திற்கு சமர்பிக்க வேண்டும். அலங்கார மீன்வளர்ப்பினை 8 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திடவும், அலங்கார மீன்வளர்ப்பு மேற்கொள்ள உபகரணங்கள் தயார் செய்து விற்பனை செய்திடவும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. இது தொடர்பாக மேல் விபரங்களுக்கு மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அலுவலக வேலை நாட்களில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தொடர் மழையால் பயிர்கள் சேதம் : விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,22:11 IST

மானாமதுரை : மானாமதுரையில் கன மழையால் நெற்பயிர்கள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காப்பாற்ற வழியின்றி விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். மாவட்டத்தில் 80 ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன.

நெல், மிளகாய், பருத்தி, வாழை உள்ளிட்டவை நடவு செய்யப்பட்டு இரு மாதங்களே ஆன நிலையில், இன்னும் ஒரு மாதத்தில் மகசூல் தரும் வாய்ப்பு இருந்தது. முதலில் பெய்த மழையால் பயிர்கள் செழித்து வளர்ந்தன. அடுத்த கட்ட பாசனத்திற்கு கண்மாய்களில் தண்ணீர் போதிய அளவு இருந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. கடந்த சில நாட்களாக மானாமதுரையில் மழை பெய்கிறது. இதனால் நாற்று, தோட்டப்பயிர்கள் அழுகி வருகின்றன. விவசாயிகள் செய்வதறியாது தவிக்கின்றனர்.

இதுகுறித்து விவசாயி பாண்டி கூறுகையில், ""கத்திரி, வெண்டை, தக்காளி செடிகள் அழுகிவிட்டன. மழைக்கு பின் நட்ட நெல்லும் அழுகி வருகிறது. ஏக்கருக்கு 6,000 ரூபாய் வரை செலவு செய்துள்ளதால், கடனாளியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. சேதம் குறித்து மீண்டும் ஆய்வு செய்து, நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார்.

**மல்பெரி பரப்பு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 18,2010,00:02 IST

பொங்கலூர் : பட்டுகூடுகளின் விலை உயர்ந்து வருவதால், பொங்கலூர் பகுதி விவசாயிகள் பட்டுப்புழு வளர்க்க ஆர்வம் காட்டுகின்றனர்.இந்தாண்டு தொடர்ச்சியாக நல்ல மழை பெய்ததால், மாவுப்பூச்சிகள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பூச்சிகளின் இனப்பெருக்கம் இயற்கையாகவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், மல்பெரி செடிகளில் நல்ல வளர்ச்சி காணப்படுகிறது. வெள்ளநத்தம், கேத்தனூர் உள்ளிட்ட பகுதிகளில் இந்த சீசனில் 50 ஏக்கரில் மல்பெரி நடவு செய்வதற்கான பணிகள் நடந்து வருகின்றன. பொங்கலூர் பகுதியில் 125 விவசாயிகள், உடுமலை, பல்லடம், பொங்கலூர் உள்ளடக்கிய பகுதியில் 263 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் இருந்து மாதந்தோறும் 8000 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சில ஆண்டுகளாக, 180 முதல் 240 ரூபாய் வரை விலை போனது; தற்போது, கோவை மார்க்கெட்டில் வெண்பட்டுக்கூடு ஒரு கிலோ 360 முதல் 380 ரூபாய்க்கும், மஞ்சள் 300 முதல் 320

ரூபாய் வரையும் விலை போகிறது. ராம்நகரில் வெண்பட்டுக்கூடுகள் 420 முதல் 450 ரூபாய் வரை விலை போகிறது. பட்டுக்கூடுகளுக்கு நல்ல விலை கிடைப்பதால், இந்தாண்டு பட்டுவளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மஞ்சள் பயிரில் அழுகல் : விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,23:45 IST

திருப்பூர் : தொடர் மழை காரணமாக, மஞ்சள் பயிர் அழுகுவது, விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.
திருப்பூர் மாவட்டத்தில் இந்தாண்டு கூடுதலாக மழை கிடைத்துள்ளது; அடுத்த ஓராண்டுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. தண்ணீர் பிரச்னையின்றி, பயிர் செய்யும் நிலை உருவாகியுள்ளது. தொடர் மழை மற்றும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததால், மஞ்சள் செடியில் அழுகல் ஏற்பட்டுள்ளது.முத்தணம்பாளையம், நெருப்பெரிச்சல் உள்ளிட்ட திருப்பூர் சுற்றுப்பகுதி கிராமங்களில் மஞ்சள் பயிரிடப் பட்டுள்ளது. விவசாயிகள் கூறுகையில், "மழைநீர் வடிவதற்கு முறையான வசதி இல்லாத விளைநிலங்களில், அழுகல் வந்துள்ளது. நிலத்தடி நீர் மட்டமும் ஊற்று எடுக்கும் நிலைக்கு வந்துள்ளது. சில விவசாயிகள் தவிர, அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந் தாண்டு நல்ல விலை கிடைத்ததால், கூடுதலான பரப்பளவில் பயிர் செய்யப்பட்டது. தற்போது, ஒரு குவிண்டால் 16 ஆயிரம் வரை விற்கிறது.

ஏக்கருக்கு 20 முதல் 25 குவிண்டால் வரை கிடைக் கும். பாதிப்படைந்த விவசாயிகளுக்கு, ஐந்து குவிண் டால் மகசூலே எடுக்க முடியும். இந்தாண்டு விளைச்சல் பாதிக்கப்படும். மீண்டும் மழை துவங்கியிருப்பது, அச்சத்தை தருகிறது. உரிய நிவாரணம் கிடைக்க, அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும்,' என்றனர்.

**உருளைக்கிழங்கை விற்க வேளாண் பல்கலை அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,23:59 IST

கோவை : அறுவடையான உருளைக்கிழங்குகளைஉடனே விற்க விவசாயிகளுக்கு வேளாண் பல்கலை பரிந்துரைத்துள்ளது.உருளைக்கிழங்கு அதிக மகசூல் தரக்கூடிய குறுகிய காலப் பயிர். தமிழகத்தில் பெரும்பாலும் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் அதிகமாக பயிரிடப்படுகிறது. நீலகிரி உருளைக்கிழங்கு தரம் மற்றும் சுவை மிக்கது.இந்தியாவில் உத்திரபிரதேசம், மேற்கு வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்கள் அதிக

அளவில் உருளைக்கிழங்கை உற்பத்தி செய்கின் றன. இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்கு உருளைக்கிழங்கு ஏற்றுமதியாகிறது.  அறுவடைக்காலங்களில் உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி அடைவதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அறுவடை செய்த உருளைக்கிழங்குகளை உடனே விற்க விற்பனை செய்வதால், எடை குறைவு, கிழங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கலாம். எனவே, உருளைக்கிழங்குகளை உடனுக்குடன் விற்பனை செய்ய வேளாண் பல்கலை அறிவுறுத்தியுள்ளது.

**உடுமலையில் பருத்தி அறுவடை துவக்கம்: விலை குறைவால் விவசாயிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,23:49 IST

உடுமலை : தொடர்மழையால் பருத்தி சாகுபடியில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சந்தையில் பல்வேறு காரணங்களை கூறி செயற்கையாக கொள்முதல் விலை குறைக்கப்பட்டு வருவதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.தமிழகத்தில்,கோவை, தேனி, ராஜபாளையம், சேலம், கொங்கணாபுரம், நாமக்கல் பகுதியில் பருத்தி அதிகளவு பயிரிடப்படுகிறது. கடந்த சீசனில் பயிரிடப்பட்ட பருத்தி சாகுபடி தொடர்மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.
உடுமலை பகுதியில் பி.ஏ.பி., பாசனத்திற்கு பரவலாக பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. மிக நீண்ட இழை பருத்தி ரகங்கள் பயிரிடப்பட்டு, தற்போது அறுவடை பணிகள் துவங்கியுள்ளன. தொடர்மழையால் செடிகளில் நோய்த்தாக்குதல் மற்றும் காய் சப்பை உதிர்வது ஆகிய காரணங்களால் விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது.
அறுவடை பணிகள் துவங்கியுள்ள நிலையில், பருத்தி சந்தையில் அனைத்து ரக பருத்தியின் விலையும் சற்று குறைந்துள்ளது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தற்போது, மிக நீண்ட இழை பருத்தி ரகம் கிலோ 42 ரூபாயிலிருந்து 45 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த சீசனில் இந்த ரக பருத்தி கிலோ 48 ரூபாய் முதல் 52 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. பருவநிலை ஒத்து போனதால் கடந்த சீசனில் ஏக்கருக்கு 12 முதல் 15 குவிண்டால் வரை விளைச்சல் இருந்தது.
தற்போது ஏக்கருக்கு 10 குவிண்டால் கூட விளைச்சல் கிடைக்காத நிலை உள்ளது. தொழிலாளர் பற்றாக்குறை, நோய்த்தாக்குதலால் சாகுபடி செலவு பல மடங்கு அதிகரித்துள்ள நிலையில், நிலையான விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அறுவடை பணிகள் துவங்கியுள்ள போதிலும் கிராமங்களில் பருத்தி கொள்முதல் துவங்கவில்லை.

செடிகளில் காய்கள் வெடித்துள்ள போதிலும் தற்போது நிலவும் பனிப்பொழிவு மற்றும் லேசான மழை காரணமாக பருத்தியில் ஈரப்பதம் காணப்படுகிறது. இதனால், பருத்தியின் தரம் பாதிக்கப்பட்டு விலை மேலும் குறையும். இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்படும் அறுவடையில் மட்டுமே தரமான பருத்தி கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு, இந்த சீசனில் பருத்தி பயிரிட்ட விவசாயிகள் பல்வேறு சோதனைகளில் சிக்கி தவிக்கின்றனர்.

இந்நிலையில், பருத்தி நூல் ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளதை அடிப்படையாக கொண்டு செயற்கையாக கொள்முதல் விலையை குறைக்கும் பணியில் இடைதரகர்கள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே பருத்தி மத்திய அரசின் பருத்தி கழகத்தின் மூலம் விவசாயிகளிடையே நேரடியாக பருத்தியை கொள்முதல் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

**திராட்சை விவசாயிகள்மகாராஷ்டிரா பயணம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,23:00 IST

கம்பம்:திராட்சை சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ள கம்பம் பகுதி விவசாயிகள் குழு ஒன்றை, தோட்டக்கலைத்துறை, மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அழைத்து சென்றுள்ளது. இந்தியாவில் திராட்சை சாகுபடியில் முன்னணி வகிப்பது மகாராஷ்டிரா மாநிலம். இங்கு ஒயின் தயாரிக்க தேவைப்படும் வகைகள், ஏற்றுமதி ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது.இங்கு ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே திராட்சை அறுவடை செய்யப்படுகிறது. ஆனால் கம்பம் பகுதியை காட்டிலும் கூடுதல் மகசூல் எடுக்கின்றனர். காரணம் விவசாயிகள் இங்குள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையம் வழங்கும் நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்கின்றனர்.

எனவே மகாராஷ்டிரா மாநிலத்தில் கையாளப்படும் சாகுபடி முறைகளை தெரிந்து கொள்ளவும், நவீன தொழில்நுட்பங்கள், ரகங்கள், நோய்களை கட்டுப்படுத்தும் முறை, உரம் வைப்பது போன்ற விஷயங்களை தெரிந்து கொள்ள சென்றுள்ளனர். கம்பம், சுருளிப்பட்டி, அணைப்பட்டி, கூடலூர் பகுதிகளை சேர்ந்த 25 திராட்சை விவசாயிகளை, கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் செந்தில் அழைத்து சென்றுள்ளார்.
நேற்று முன்தினம் காலை திராட்சை விவசாயிகள் குழு, புனே புறப்பட்டு சென்றது.

**விண்ணை முட்டும் தேங்காய் விலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,23:17 IST

சிவகங்கை:தொடர் மழையால் தேங்காய் வரத்து குறைந்து, விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.சிவகங்கையில் காய்கறி விலை நிலவரம் (கிலோ):கடந்த வாரம் 80 க்கு விற்ற கத்தரிக்காய்- 40; வெண்டைக்காய் -24; 20 க்கு விற்ற பாகற்காய்- 24; முருங்கை பீன்ஸ்- 40; 30 க்கு விற்ற கேரட் -40; 18க்கு விற்ற முள்ளங்கி- 24; 24 க்கு விற்ற உருளை கிழங்கு- 40; 15க்கு விற்ற முட்டை கோஸ்- 20; 20 க்கு விற்ற தக்காளி-30; கருணை கிழங்கு- 30; 30 க்கு விற்ற இஞ்சி- 60; 40 க்கு விற்ற அவரைக்காய்- 45; பட்டர் பீன்ஸ்- 100; 20 க்கு விற்ற சின்ன வெங்காயம்- 30, பெல்லாரி- 30; 20 க்கு விற்ற காலி பிளவர்- 24; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; 18 க்கு விற்ற பச்சை மிளகாய்- 24; 20 க்கு விற்ற பீட்ரூட்- 30; 30 க்கு விற்ற நூக்கல் -40; 60 க்கு விற்ற சோயா பீன்ஸ்- 80; எலுமிச்சை- 25; 20 க்கு விற்ற பீர்க்கை- 30; 30 க்கு விற்ற டர்னிப் -40; 10 க்கு விற்ற சீனி அவரை- 15; 18 க்கு விற்ற சவ்சவ்- 20; 20 க்கு விற்ற மல்லி தழை- 30; மூன்று ரூபாய்க்கு விற்ற சிறிய தேங்காய்- 7; எட்டு ரூபாய்க்கு விற்ற நடுத்தர காய்- 14.கடந்த மாதங்களில் மழை இல்லாததால் தேங்காய் விளைச்சல் குறைந்தது. தற்போது தொடர் மழை பெய்வதால் தேங்காய் விலை அதிகரித்துள்ளது.வியாபாரி ஒருவர் கூறுகையில்,""நான்கு மாதங்களுக்கு முன் 1,000 காய் 2,500 ரூபாய்க்கு விற்றது. தற்போது 5,500 க்கு விற்கிறது. தை மாதம் வரை விலை குறைய வாய்ப்பில்லை," என்றார்.

**மிரள வைக்கிறது மிளகாய் வத்தல் விலைதுவண்டது துவரை, படுத்தது பாசிப்பருப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,22:53 IST

விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில், முண்டு ரக மிளகாய் வத்தல் ஏற்றுமதியால், தட்டுப்பாடு ஏற்பட்டு மூடைக்கு 500 ரூபாய் உயர்ந்துள்ளது. புது துவரை வரத்து இருப்பதால் மூடைக்கு 500 , பாசிப்பருப்பு 200 ரூபாய் குறைந்துள்ளது.விருதுநகரில் கடந்த வாரம் சர்க்கரை விலை மூடைக்கு 3055லிருந்து  3,065 ரூபாயாக  உயர்ந்தது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,200 ஆகவும்,சூரியகாந்தி எண்ணெய் 730 லிருந்து 750 ஆகவும்,  பாமாயில் 930 ரூபாயாகவும் உள்ளது. நிலக்கடலைப் பருப்பு 3,600 ஆகவும், 2,800 ஆக இருந்த கடலைப் புண்ணாக்கு 2,700 ரூபாயாகவும் குறைந்துள்ளது.பருப்பு: நயம் உளுந்து விலை மூடைக்கு 4,600 ரூபாயிலிருந்து 4,700 வரையும், சுமார் ரகஉளுந்து 4,200 லிருந்து 4,300 வரையும், பர்மா பருவட்டு உளுந்து 5,200 லிருந்து 5,300 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,200லிருந்து 6,300 ஆகவும், பொடி உளுந்தம் பருப்பு 5,500 ஆகவும், பர்மா பருவட்டு உளுந்தம் பருப்பு 5,600 ரூபாயாகவும் உள்ளது.

துவரை 3,900 லிருந்து 3,400 ரூபாயாக குறைந்தது. பொடி துவரை 3,000 ஆகவும், துவரம் பருப்பு 5,000 ஆகவும், பொடி துவரம் பருப்பு 4600 லிருந்து 4,700 ரூபாயாகவுள்ளது. நயம் பாசிப்பயறு 4,600 ரூபாயிலிருந்து 4,700 வரையும், சுமார் ரகம் 4,100 ஆகவும், நயம் பாசிப்பருப்பு 6,100 லிருந்து 5,900 ஆகவும், சுமார் ரகம் 5,600 ரூபாயாகவும் உள்ளது. கொண்டைக்கடலை 2,800 ஆகவும், பொரிகடலை 2,180 ரூபாயாகவும் உள்ளது.மிளகாய் வத்தல்: விருதுநகரில் சம்பா மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாயிலிருந்து 3,500 வரையும், சங்கரன்கோவில் வத்தல் 5,000 லிருந்து 5,500 வரையும், முண்டு வத்தல் 4,500 லிருந்து 5,000 ரூபாய் வரையும் உள்ளது. புதுசோடை வத்தல் 2,500 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,000 ரூபாயாகவும் உள்ளது.

**காபி விளைச்சல் "கம கம'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2010,00:00 IST



நீலகிரி: இம்மாவட்டத்தின் பெரும்பாலான நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. **"தேயிலை நகரம்'** என்றழைக்கப்படும் கோத்தகிரியின் சுற்றுவட்டாரப் பகுதிகளில், தேயிலை விவசாய பரப்பு அதிகரித்து வருகிறது. சமீப காலமாக தேயிலையின் ஊடுபயிராக காபி செடிகளை பயிரிடும் முறையை தேயிலை விவசாயிகள் கடைபிடிக்கின்றனர். சோலூர்மட்டம், கீழ்கோத்தகிரி, குஞ்சப்பனை பகுதிகளில் ரொபஸ்டா வகை காபி செடிகள் வளர்க்கப்படுகின்றன. அராபிகா வகை காபியும் களைகட்டியுள்ளது. பசுந்தேயிலையின் விலை அவ்வப்போது மாறும் நிலையில், ஊடுபயிராக விளையும் காபியை கொண்டு நஷ்டத்தை ஈடுகட்டும் விவசாயிகள், இந்த ஆண்டு காபி விளைச்சல் அமோகமாக உள்ளதால், அறுவடைக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

## கொப்பரை தேங்காய்க்கான கொள்முதல் விலை உயர்வு



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*எதிர்வரும் 2011–ஆம் ஆண்டில் கொப்பரைத் தேங்காய்க்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.75 உயர்த்தப்படுகிறது. நாட்டில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விலை உயர்த்தப்பட்டுள்ளது.*

*வேளாண் விளைபொருள்கள் விலை நிர்ணய ஆணையத்தின் பரிந்துரையின் பேரில், பொருளாதார விவகாரத்திற்கான மத்திய அமைச்சரவை குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

*சாதாரண கொப்பரை தேங்காய்க்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,525 என்ற அளவிலும், உயர்தர கொப்பரை தேங்காய்க்கு ரூ.4,775 என்ற அளவிலும் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

## 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி சரத்பவார் அறிவிப்பு

*புனே, டிச.18–*

*5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக மத்திய விவசாயத்துறை மந்திரி சரத் பவார் அறிவித்தார்.*

*கூடுதல் உற்பத்தி*

*புனே அருகே உள்ள மாஞ்சிரியில் மராட்டிய மாநில கூட்டுறவு சர்க்கரை சம்மேளனத்தின் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் மத்திய விவசாயத்துறை மந்திரி சரத்பவார் நேற்று கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*கூடுதலாக 5 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிக்கையை மத்திய அரசு இந்த வாரம் வெளியிடும்.*

*உற்பத்தி எதிர்பார்ப்பு*

*இந்த ஆண்டு இரண்டரை கோடி டன் சர்க்கரை உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. பேச்சு வார்த்தை நடத்தி கரும்புக்கான இறுதி விலையை நிர்ணயிக்க முதல் மந்திரி பிரிதிவிராஜ் சவான் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் மற்றும் ஆலை அதிபர்களின் நலனை முன்னிட்டு கரும்பு அரவையையும் அவர் உறுதி செய்ய வேண்டும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*இந்த விழாவில் பங்கேற்ற முதல்–மந்திரி பிரிதிவிராஜ் சவான் பேசுகையில், “மராட்டியத்தில் சர்க்கரை துறைக்கு ஸ்திரத்தன்மை தேவைப்படுகிறது. ஆலை நிர்வாகத்தில் நிதி நிர்வாக ஒழுங்கு வேண்டும். மாநிலத்தில் நலிவடைந்த ஆலைகளின் எண்ணிக்கை அதி கரித்து வருகிறது. சர்க்கரை ஆலை களில் வெளிப் படையான நிர்வாகம் வேண்டும்” என்றார்.*

**ஊத்துக்கோட்டையில் பலத்த மழையால் 15 ஆயிரம் ஏக்கர் நெல்பயிர் நாசம்**



மழை வெள்ளத்தில் சேதம் அடைந்த நெல் பயிர்களை படத்தில் காணலாம்.

ஊத்துக்கோட்டை, டிச.18–

ஊத்துக்கோட்டையில் பலத்த மழையால் 15 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர் நாசம் அடைந்தது.

நெல் பயிர்கள் நாசம்

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை தாலுகாவில் உள்ள எல்லாபுரம், பூண்டி ஒன்றியங்களில் விவசாயத்தை நம்பி 85 சதவீதத்திற்கும் அதிகமானோர் உள்ளனர். இந்த முறை பருவமழை நன்றாக பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் நெல் பயிரிட்டனர். இதனிடையே வங்க கடலில் உருவான காற்றழுத்தம் காரணமாக பலத்த மழை கொட்டியது. இதனால் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் பயிர்கள் நீரில் மூழ்கின. இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் மழை கொட்டி தீர்த்தது. இதனால் நெல்பயிர் மேலும் சேதம் அடைந்தது. ஏக்கருக்கு சுமார் ரூ.15 ஆயிரம் வரை செலவு செய்து விவசாயம் செய்த விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளானார்கள்.

15 ஆயிரம் ஏக்கர்

குறிப்பாக மாம்பாக்கம், பூண்டி, பேரிட்டிவாக்கம், போந்தவாக்கம், தாராட்சி, பாலவாக்கம், தொழவேடு, தும்பாக்கம், தண்டலம், பேரண்டூர், வேலகாபுரம், நந்திமங்கலம், நெய்வேலி பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நெல்பயிர் தண்ணீரில் மூழ்கியது. விவசாயிகள் தங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை

விடுத்துள்ளனர்.

வெள்ளச்சேதத்தை பார்வையிட தமிழ்நாட்டுக்கு வந்துள்ள மத்திய குழு தங்கள் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.